கமு/கமு/அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை - சாய்ந்தமருது

# இரண்டாந் தவணைக் கணிப்பீடு - 2023

| தரம் 5 | தமிழ்மொழி | | | | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| | வகுப்பு | | நேரம்: | 1 மணி 30 நிமிடம் | |
| சுட்டெண்/பெயர்: | | | | | |

**01. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துகளும் முறையே எத்தனை?
    1. 12, 18  2. 18, 12  3. 216, 217

02. அஃறிணை ஒன்றன் பால்ச் சொல்.
    1. வண்டு  2. விஞ்ஞானி  3. பெண்கள்

03. 'அலை' என்பதன் கருத்து.
    1. கடல்  2. திரை  3. வானம்

04. "எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினால் போல்" என்ற உவமானத்திற்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.
    1. சிக்கலைத் தீர்க்க உதவுதல்
    2. மேலும் கோபமூட்டச் செய்தல்
    3. வறியவர்களுக்கு பண உதவி வழங்குதல்

05. கழுதையின் மலம் எவ்வாறு அழைக்கப்படும்.
    1. எச்சம்  2. சாணம்  3. விட்டை

06. மயில் - அகவும் என்பதுபோல் புறா
    1. கரையும்  2. குறுகுறுக்கும்  3. கூவும்

07. வனிதை என்பதன் ஒத்த சொல் யாது?
    1. மகள்  2. பெண்  3. சிறுமி

08. 'இன்பதுன்பம்' என்ற இணைமொழியின் கருத்து.
    1. சங்கடம்  2. சுகதுக்கம்  3. மிக ஒற்றுமை

09. 'கடன்கழித்தல்' என்ற மரபுத்தொடரின் கருத்து யாது?
    1. மனமின்றிச் செய்தல்  2. உதவுதல்  3. நிறைவடைதல்

10. பச்சிலை என்பதைப் பிரித்தெழுதினால்
    1. பச்சை + இலை  2. பச்சி + இலை  3. பசுமை + இலை

(10 × 2 = 20)

Education கல்வி අධ්‍යාපන

02. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

கருத்துப் பரிமாற்றத்திற்கு தகவல் தொடர்பு மிக அவசியமாகும். எந்த அறிவியல் வளர்ச்சியும் இல்லாத காலங்களில் வேலையாட்கள்தான் செய்தி கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்கள் நடந்து சென்றார்கள். அல்லது குதிரையில் பயணித்தார்கள். அரசனுக்கு அரசன் ஓலையில் எழுதி அனுப்பும் செய்தியைக் கொண்டு சென்றவர்கள் 'ஓலை தாங்கிகள்' என்று அழைக்கப்பட்டனர்.

**பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

1. கருத்துப் பரிமாற்றத்திற்கு மிகவும் அவசியப்படுவது எது?
   …………………………………………..
2. அறிவியல் வளர்ச்சி இல்லாத காலங்களில் செய்திகளைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டடவர்கள் யாவர்?
   …………………………………………..
3. 'பரி' என்பதன் ஒத்த சொல் யாது?
   …………………………………………..
4. அரசனுக்கு அரசன் ஓலையில் எழுதி அனுப்பும் செய்தியைக் கொண்டு சென்றவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?
   …………………………………………..
5. வேலையாட்கள் செய்திகளைக் கொண்டு சென்ற முறைகள் இரண்டு தருக.
   …………………………………………..
   …………………………………………..

(5 × 2 = 10)

03. அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

| சகாப்தம், லூயி பாஸ்டர், படியெடுத்தல், முன்னுக்கு வருவதற்கு, பைகஸ் இலாஸ்டிகா |
|---|

1. ஒன்றைப் போல் பிரதியெடுத்தல் ………………………….... ஆகும்.
2. நூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி ……………………….. ஆகும்.
3. இறப்பரின் அறிவியல் பெயர் ………………………….... ஆகும்.
4. ………………………….... என்பவர் நுண்ணங்கிகளே உணவு பழுதடைதல், நொதித்தல் போன்றனவற்றிக்கு காரணம் எனக் கண்டு பிடித்தவர் ஆவார்.
5. அனுலா தனது நண்பிக்கு ………………………….... உதவினாள். (5 × 2 = 10)

04. பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.

1. தெங்கு + காய் - …………………………………………..
2. காடு + அரசன் - ………………………………………….. (1 × 2 = 2)

05. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

1. முந்நூறு - …………………………………………..
2. ஆற்றுமலை- ………………………………………….. (1 × 2 = 2)

06. பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவினை எழுதுக.

1. இ.ம.வ - …………………………………………..
2. இ.பெ.கூ - …………………………………………..
3. கி.மு - …………………………………………..

(3 × 2 = 6)

kalvi.lk

07. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக..

1. மனிதர்கள் ஆற்றின் அக்கரைக்கு கொண்டு செல்பவன். ..............................................
2. வீண் செலவு செய்பவன் ..............................................

(2 × 2 = 4)

08. பின்வரும் சொற்களின் பலபொருள் தரும் சொற்களை எழுதுக.

1. இருசுடர் - ..............................................
2. முக்கனி - ..............................................
3. நாற்பொருள் - ..............................................
4. ஐம்பூதம் - ..............................................
5. அறுசுவை - ..............................................

(5 × 2 = 10)

09. பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.

1. கைகொடுத்தல் - ..............................................
2. அறைகூவுதல் - ..............................................
3. ஆறப்போடுதல் - ..............................................

(3 × 2 = 6)

10. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதக.

1. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

   ..............................................
2. பழகப்பழகப் பாலும் புளிக்கும்.

   ..............................................

(2 × 2 = 4)

11. பின்வரும் குறியீடுகளின் கருத்தினை எழுதக.

1. 

2. 


.............................................. ..............................................

(2 × 2 = 4)

12. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை தொடர்பு சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

1. மான் கூட்டம் சிதறி ஓடியது. ( )
2. எமக்குக் கல்வியும் ஒழுக்கமும் இரு கண்களைப் போன்றது. ( )

(2 × 2 = 4)

13. பின்வரும் வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. மாலையில் மீனவர்கள் வலைகளுடன் கடலுக்குச் சென்றனர்.

   ..............................................

(1 × 2 = 2)

14 பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.

1. நட்சத்திரம் வானில் மின்னுகின்றது.

   ..............................................

(1 × 2 = 2)


kalvi.lk

15. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. மாமன்னரே நீங்கள் நேற்றிரவு கண்ட கனவு யாது
2. அந்த மலரில் சிவப்பு நீலம் ஊதா ஆகிய நிறங்களுள்ள இதழ்கள் ஆறு உண்டு

**(1 × 2 = 2)**

16. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துக.



☐ **இடமிருந்து வலம்**

01. வட மாகாணத்தின் தலைநகரம்.
03. மண் வகைகளில் ஒன்று.
05. உலர்ந்த இலை இவ்வாறு அழைக்கப்படும். (குழம்பியுள்ளது)
06. தசை என்றும் கூறலாம்.
07. குற்றவாளியைக் கண்டுபிடிக்கத் தேவையான தகவல்

☐ **மேலிருந்து கீழ்**

01. Who என்ற சொல்லின் தமிழ் அர்த்தம்.
02. தாய் தன் பிள்ளைகள் மீது வைக்கும் அன்பு.
03. நடந்து செல்லும் போது காலில் நாம் அணிவது.
04. இது ஒரு நிறம்.
05. உணவு / மருந்து ஆகியவற்றில் இருப்பது.

(10× 1 = 10)

17. ‘வாசிப்பின் முக்கியத்துவம்’ என்ற தலைப்பில் மூன்று வாக்கியம் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் அமைதல் வேண்டும்.)


1. ……………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………

3. ……………………………………………………………………………………

(2 × 3 = 6)

Education கல்வி අධ්‍යාපන




# தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY ( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

**075 287 1457**

BUY BOOKS

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page